பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

29 09 2026 TUESDAY 6 45AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வலுவான நடைமுறை அவசியம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

2. தாராபுரம், மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் அரசியல் கட்சிகளின் பிரசாரம் தீவிரமடைந்துள்ளது.

3. மதுராந்தகத்தில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது மாநில அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கோரியுள்ளார்.

4. தமிழகத்தின் 15 மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

-------------

பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வலுவான நடைமுறை அவசியம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று பயங்கரவாதம் தொடர்பான மாநாட்டினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதுதான் மத்திய அரசின் நிலைப்பாடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆறு ஆண்டுகளில் இந்தியாவில் பல்வேறு குற்றங்களை புரிந்து வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற 288 பேர் இந்தியா கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

36 நாடுகளிலிருந்து இவர்கள் இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

-------------

காந்தி ஜெயந்தி, விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

வரும் 1-ம் தேதி முதல் 4-ம் தேதி வரை சென்னையிலிருந்து பிற நகரங்களுக்கும், மற்ற நகரங்களிலிருந்து சென்னைக்கும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக அரசு விரைவு போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதன்படி, வரும் 1-ம் தேதி ஆயிரத்து 580 பேருந்துகளும், அடுத்த நாள் 2-ம் தேதி 745 பேருந்துகளும், 3-ம் தேதி 895 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

-------------

தாராபுரம், மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் அரசியல் கட்சிகளின் பிரசாரம் தீவிரமடைந்துள்ளது.

இந்த தொகுதிகளில் அடுத்த மாதம் 6-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் ஆளும் தவெக, திமுக, அஇஅதிமுக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் பிரசாரத்தை தீவிரப்படுத்தி உள்ளனர்.

தவெக மூத்த தலைவரும் அமைச்சருமான திரு, ராஜீவ், இந்த தேர்தலில் தங்கள் கட்சி வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

திமுக துணை பொதுச்செயலாளர் திருமதி. கனிமொழி, தமிழகத்தில் மின்வெட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சனை அதிகரித்துள்ளதாக குறை கூறியுள்ளார்.

தாராபுரத்தில் நடைபெற்ற கட்சியின் மகளிர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

-------------

மதுராந்தகத்தில் மாற்றுத்திறனாளி சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது மாநில அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கோரியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், அந்த சிறுமிக்கு அவருடைய வீட்டிலேயே பாதுகாப்பு இல்லாத ஆட்சியை இந்த அரசு நடத்தி வருவதாக குறை கூறியுள்ளார்.

இந்த சூழலில் பெண்கள் பாதுகாப்பை பற்றி முதலமைச்சர் எப்படி பேச முடியும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

-------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைக்கு 24 மணி நேரமும், துப்பாக்கிய ஏந்திய காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்கள் முன்னிலையில், அந்த இயந்திரங்ளை திருமதி. அர்ச்சனா பட்நாயக் ஆய்வு செய்தார்.

-------------

தமிழகத்தில் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் சனிக்கிழமைகளிலும், ஊராட்சி பகுதிகளில் வியாழக்கிழமைகளிலும், நாய்களுக்கான ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

கால்நடைதுறையினரின் இதுபோன்ற தடுப்பூசி பணிகளின் போது பொதுமக்களும் ஒத்துழைப்ப அளிக்க வேண்டும் என்று ராணிப்பேட்டை மாவட்ட கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் திரு. திருநாவுக்கரசு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் 46 செகண்ட்ஸ்)

-------------

தமிழக – கேரள எல்லைப் பகுதியான தென்காசி மாவட்டம் புளியரை சோதனைச்சாவடியில் காவல்துறையினருடன், வனத்துறையினரும் இணைந்து கண்காணிப்பு சோதனையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கனிமங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட்– 40 செகண்ட்ஸ் )

-------------

வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட 15 மாவட்டங்களில் இன்றும், நாளையும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் வடக்கு உள் கர்நாடகம் முதல் தமிழகம் வரை சுமார் ஒரு கிலோமீட்டர் உயரத்தில் காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுவதால் நாமக்கல், ஈரோடு, அறியலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவு நேரங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது.

-------------

ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பது, போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக அமெரிக்கா-ஈரான் இடையே பேச்சுவார்த்தையை தொடர வேண்டும் என மத்தியஸ்த பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

-------------

இலங்கை பொது சுகாதார திட்டத்திற்கு உதவும் வகையில், அந்நாட்டிற்கு 3 டன் காசநோய் எதிர்ப்பு மருந்துகளை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

-------------

ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் நேற்று வெற்றிகரமாக விண்வட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

-------------

ரபி பருவத்திற்கான ஒருங்கிணைந்த ஆயத்தப் பணிகளை மாநில அரசுகள் விரைவாக முடிக்க வேண்டும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

தூத்துக்குடி திரேஸ்புரம் கடலோரப் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 3 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்து, 4 பேரை கைது செய்தனர்.

-------------

தமிழக – கேரள எல்லைப் பகுதியான தென்காசி மாவட்டம் புலியரை சோதனைச்சாவடி வழியாக கனிமவளங்கள் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து காவல்துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

-------------

தேனி மாவட்டத்தில் தேக்கம்பட்டி உள்ளிட்ட 5 கிராமங்களில் புதிதாக அமைக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கான பதிவு சான்றிதழை ஆட்சியர் திரு. வைத்திநாதன் வழங்கினார்.

-------------

கள்ளக்குறிச்சியில் கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனையை மாவட்ட ஆட்சியர் திருமதி. பத்மஜா தொடங்கி வைத்தார்.

-------------

சென்னை அண்ணாசாலையில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் நவராத்திரி கொலு பொம்மைகள் கண்காட்சி மற்றும் விற்பனையை மாநில கைத்தறித்துறை செயலர் திருமதி லில்லி தொடங்கி வைத்தார்.

-------------

தமிழகத்தில் இருந்து ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள விரும்புவோர் அடுத்த ஆண்டு ஜனவரி 31-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று மாநில பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை கேட்டுக்கொண்டள்ளது.

-------------

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இன்று ஆடவர் மற்றும் மகளிர் வில்வித்தை போட்டிகள் நடைபெற உள்ளன.

இதில், ஆடவர் பிரிவில் நீரஜ் செளகான், தீரஜ் பொம்மதேவரா, மகளிர் பிரிவில் கீர்த்தி ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

ஆடவர் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் தஜினேஸ்வர், சுவித் நாகல் ஆகியோர் தத்தமது போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

துப்பாக்கி சுடுதல் டிராப் மகளிர் தகுதி சுற்று போட்டிகளும், அணிகள் இறுதி போட்டிகளும் நடைபெற உள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஈட்டி எறிதலில் வெள்ளி பதக்கம் வென்றுள்ள யஷ்வீர் சிங், வெண்கல பதக்கம் வென்ற ரோகித் யாதவ், மகளிர் 5000

மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெண்கலம் வென்றுள்ள பாரூல் சௌத்ரி உள்ளிட்டோருக்கு குடியரசுத் தலைவர் திருமதி, திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நீளம் தாண்டுதல் பிரிவில் வெள்ளி பதக்கம் வென்ற முரளி ஸ்ரீசங்கருக்கும் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

----------

இந்தியா ஏ, ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

புதுச்சேரியில் இப்போட்டி காலை மணி 9.30-க்கு தொடங்குகிறது.

-----------

இந்தியா ஏ, ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

மொகாலியில் இப்போட்டி காலை மணி 9.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>>>END<<<<<<<